12th March 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மூன்றுவது செங்கற்பட்டு ஜில்லாவில் இருக்கிறது. அதாவது மட்டன் அண்டு ஹேரீ டைப். மட்டன் டைப்பெல்லாம் நம் ஊர்தான்.

SRI A. R. SUBBIAH MUDALIAR: பஞ்சாப் மாகாணத்தில் நல்ல மாடுகள் கிடைக்கின்றன. இனமாகக் கொடுக்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள். அதை வாங்கி சர்க்கார் வளர்ப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இனமாகக் கொடுக்க தேவையில்லை. அது தெருவிலே விடப்பட்டிருக்கிறது. அதைக் கொண்டு வந்தால் வளர்க்கலாம் என்று இருக்கிறது. அது ஒங்கோல் மாடு மாதிரி இருக்கிறது. மத்திய சர்க்கார் அதைப் பிடித்துத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ரயில் சத்தம் தான் நாம் கொடுக்கவேண்டும். அது 100 ரூபாய்க்கு மேல் ஆகாது. நல்ல மாடுகளாக வாங்கி இங்கே வளர்ப்புக்கு விடலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம்.

SRI A. GOVINDASAMY: வளவனூரிலே ஒரு சப்ளிமென்டரி எக்ஸ்டென்ஷன் சென்டர் வைப்பதாக பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வளவனூரில் எப்பொழுது திட்டம் அமுலுக்கு வரும் என்று அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா? 9 a.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்த ஆண்டிலே வரும். ஆனால், எப்பொழுது தொடங்கப்படும் என்பதற்கு இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை.

* 736 Q.—SRI M. K. SOMASUNDARAM (on behalf of Sri V. Sankaran): Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) how much money was allotted for increasing the cattle-wealth of the State in the Second Five-Year Plan period; and

(b) the amount actually spent during the said period till now?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Rs. 133·07 lakhs.

(b) Rs. 34·67 lakhs.

Fair rent

* 737 Q.—SRI R. SRINIVASA IYER (on behalf of Sri S. Lazar): Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal before the Government to revise the definition of 'Fair Rent' in the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956?

THE HON. SRI M. A. MANICKAVELU: No, Sir.

Hostel for Harijans

* 738 Q.—SRI P. G. MANICKAM: கனம் பொதுமராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வடகைக் கட்டிடங்களிலிருக்கும் ஹரிஜன மாணவர்கள் மாணவிகளுடைய ஹாஸ்டல் கட்டிடங்களுக்கு அரசாங்க மூலம் கட்டிடங்கள் கட்டப்படுவதற்காக 1958–59-ம் வருஷத்திலே ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு?